முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1034

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.07.2022, வெள்ளிக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
   அறம் வளர்த்துவருகின்ற தேசிகா வாழ்க
   மாறுதலை கலியினில் செய்வேன் என்று
   மாதவசியாய் வந்த ஞான தேசிகனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 13 நாள், 29.07.2022 வெள்ளிக்கிழமை)
   ஊழ் வெல்லும் மகா சக்தி தன்னை
   உத்தமனே வரமாக பெற்று வந்துள்ளாய்
3. உள்ளபடி சத்தியன் உன்னை வணங்கும்
   உலகமக்கள் அனைத்து பேருக்கும் சத்தியமான வாழ்வு
   வாழ்வுதான் ஞான வாழ்வாக வரமாகக் கிட்டி அவரவர்க்கும்
   இனி பிறவா பெரும்பேறு உறுதியாகும் இந்தபிறவியிலே பேரின்பத்தை அடைய நேரும்
4. நேர்மைபட உன் தர்மத்தை
   நீதிநெறி காட்டும் உன் சன்மார்க்கத்தை
   பெருமைபட உலகோர் ஏற்று
   பிரணவக்குடில்நோக்கி தொடர்ந்து வந்தால்
5. வந்தாலே போதும் அவர்கட்கெல்லாம் ஞானம்
   வலிய தானாக ஐயமற
   ஆறுமுகன் என் அருளால் கிட்டி
   அழியாமை என்பது அனைவருக்கும் சித்திக்கும்
6. சித்திக்க அரங்கன் உன் திருவடி
   சித்தமென உலகோர் பணிந்து வர
   இத்தரையில் யாவருக்கும் ஞானியாகும்
   இணையில்லா வாய்ப்பு சடுதி கிட்டும்
7. கிட்டுமே அரங்கனால் இந்த அற்புதம்
   குவலயம் கண்டு ஞான உலகமாக
   தட்டாது ஞானிகள் ஆளும் ஆட்சிக்காலமாக
   தரணியே அற்புதம் நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–